அதனலே இந்த ரெட்ராஸ்பெக்டிவ் எப்பெக்ட் ஓரளவுக்குத்தான் ஏற்படுத்த முடியும். அதைவிட்டு 5 வருஷம், 6 வருஷம், 8 வருஷம் என்று போட்டால் அதன் மூலம் பெரிய சிக்கல்தான் ஏற்படும். அதனலேதான் இப்படி போடப்பட்டு இருக்கிறது.

DEPUTY SPEAKER : The question is—

'That the Madras Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Aendment) Bill, 1961 be taken into consideration'.

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2, 3 and 1 and the Preamble were put and carried.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move—

'That the Madras Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Amendment) Bill, 1961, be passed'.

DEPUTY SPEAKER : The question is—

'That the Madras Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Amendment) Bill, 1961, be passed'.

The motion was put and carried and the Bill was passed.

(4) THE MADRAS TENANTS' AND RYOTS' PROTECTION (AMENDMENT) BILL, 1961

*THE HON. SRI M. A. MANICKAVELU : Mr. Deputy Speaker, Sir, I beg to introduce the Madras Tenants' and Ryots' Protection (Amendment) Bill, 1961, and move—

"That the Bill be taken into consideration".

The Madras Tenants' and Ryots' Protection Act, 1949, was enacted in 1949 with a view to provide for the temporary protection against eviction, among others, of the tenants of private lands in estates governed by the Madras Estates Land Act and against the sale of the holdings of the ryots in such estates and to provide for the stay of suits and other proceedings relating to such eviction and sale pending the taking over of the estates by the Government under the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948). The Act provided that during its continuance, no tenant of any private land in an estate shall be liable to be evicted by the landholder of the estate in pursuance of a decree or order for eviction and that no holding of a ryot in an estate shall be liable to be sold or brought to sale in pursuance of a decree, order or other proceeding for recovery of rent. It also laid down that all suits, proceedings in execution of decrees or orders and other proceedings for the eviction of such tenants from their lands or in which the sale of holding of a ryot for recovery of rent was claimed shall stand stayed subject to certain conditions. The Act was enacted originally for a period of

---

* Published in the *Fort St. George Gazette*, dated 26th July 1961.

24th August 1961] [Sri M. A. Manickavelu]

two years in the first instance. It has been continued from time to time. The life of the Act now stands extended up to and inclusive of 7th October 1961. The process of taking over estates under the Abolition Act is nearing completion, but there still remains some estates to be taken over. The Abolition Act does not also apply to inam villages which became estates by virtue of the Madras Estates Land (Third Amendment) Act, 1936. The question of undertaking legislation for taking over this class of estates also is under the consideration of the Government. Meanwhile, if the Madras Tenants' and Ryots' Protection Act, 1949 is allowed to expire on 7th October 1961, the proceedings for the sale of holdings, etc., which had been initiated and which had been stayed by that Act will get revived and could be proceeded with and even fresh suits may be launched by landholders in these areas. The Government have therefore decided to extend the life of the Tenants and Ryots' Protection Act, 1949 for a further period of two years. The Bill accordingly provides for the extension of life of the Act up to 7th October 1963. I request that the motion may be accepted.

DEPUTY SPEAKER : Motion moved—

'That the Madras Tenants' and Ryots' Protection (Amendment) Bill, 1961, be taken into consideration.'

SRI M. KALYANASUNDARAM : ஸார், நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இன்றைக்குப் பேசிய இந்த பிரசங்கத்தை ஒவ்வொரு முறையும் பேசிக்கொண்டு வருகிறார்கள். ஒவ்வொரு முறையும் இதன் ஆயுட்காலத்தை நீடிக்கும்போதும், அதற்கு முன்னுரையாகப் பேசும்போது பேசக்கூடிய பேச்சுக்கள் எல்லாம் கிட்டத்தட்ட அதே அளவில் தான் இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். இதிலே உடனடியாகக் கொண்டு வருவதற்கு என்ன இடையூறு இருக்கும் என்று என்றால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஏற்கனவே சர்க்கார் அநேக இனாம் எஸ்டேட்டுக்களை எடுத்துக்கொண்டு விட்டது. மீதியுள்ள சில இனாம் நிலங்களையும், அதாவது சில சர்வீஸ் இனாம் எஸ்டேட்டுக்களைத் தவிர எடுத்துக் கொண்டு அவைகளுக்கு நஷ்ட ஈடாக ஒரு தொகையை கொடுப்பதற்கான முயற்சியை எடுத்துக்கொள்வதற்கு ஒரு சட்டத்தைக் கொண்டு வரவேண்டிடியது ரொம்பவும் அவசியமாகும். ரயத்துவாரி பிரதேசங்களிலே இருக்கக் கூடியவர்களை வெளியேற்றும் வேலை நடந்து கொண்டிருக்கிறது. இன்னும் கூட பல கிராமங்களில் வெளியேற்றம் நடந்துகொண்டு வருகிறது. இது போன்ற பல சம்பவங்கள் கனம் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்திருக்குமென்று நான் நினைக்கிறேன், அதைத் தடை செய்வதற்கு ஓரளவாவது உடனடியாக ஒரு அவசரச் சட்டம் கொண்டு வரவேண்டியது மிகவும் அவசியமாகும். ஒரிஜினலாக வரக்கூடிய சட்டம் வருவதற்குச் சற்றுக் காலதாமதமானாலும்கூட, இப்போது எடுக்கப்படாத இனாம் நிலங்களில் இருக்கக்கூடிய குடியானவர்களை வெளியேற்றாமல் பாதுகாப்பு அளிப்பதற்கு மட்டும் தனியாக ஒரு அவசரச் சட்டம் கொண்டுவர வேண்டும். அனாவசியமாக குடியானவர்களை அவர்கள் இருக்கும்படியான நிலங்களிலிருந்து அதன் சொந்தக்காரர்கள் வெளியேற்றாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது சர்க்காரின் முக்கிய கடமையாகும். அதேபோல் இருவார பாத்தியதையும் குடியானவர்களுக்கும், அதன் சொந்தக்காரர்களுக்கும் பொதுவான முறையிலே அளிக்கப்பட வேண்டும். இந்த பாதுகாப்புக்கூட கொடுக்க முடியாத அளவில் இப்போது இருக்கிறது. ஆகவே இந்த பாதுகாப்புகள் கொடுக்கக்கூடிய முறையிலே திருத்தி எழுதி, குடியானவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் முறையிலே சட்டம் கொண்டு வரவேண்டுமென்பதை எடுத்துக்கூற விரும்புகிறேன்.

[24th August 1961

SRI R. SRINIVASA IYER ஸார், விவசாய நிலங்களில் சாகுபடி செய்கிறவர்களை வெளியேற்றப்படாமல் பாதுகாப்பு அளிக்கும் முறையிலே கொண்டு வரப்பட்டுள்ள இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன். இதிலே இருக்கக்கூடிய இன்னொரு விஷயத்தையும்நான் எடுத்துக் கூற விரும்புகிறேன். இந்த இனும் என்பதிலே 1936 இனும் என்று சொல்லி ஒரு இனும் இருக்கிறது. அதாவது சென்னை 1936-ம் வருஷத்திய 18-வது சட்டப்படிக்குள்ள இனும். அதேபோல் ரயத்துவாரி என்பதிலே மைனர் இனும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதைத் தவிர, டேக்கன் ஓவர் எஸ்டேட் என்றும், பார்ட் இனும் என்றும், இனும் நிலம் சொந்த நிலம் என்றும் சொல்லப்பட்டு, சில இனும்கள் டேக்கன் ஓவர் செய்யப்படாமல் இருக்கின்றன. இதைப்பற்றிச் சட்டம் கொண்டு வரவேண்டுமென்றால் சீக்கிரமாகக் கொண்டு வரவேண்டும். இப்போது ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்ன விஷயத்தைத் தவிர, இதிலே இன்னொரு இடைஞ்சல் இருப்பதையும் நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இதற்கு சர்க்கார் உடனடியாக ஒரு திருத்தம் கொண்டு வரவேண்டும். அது என்னவென்று கேட்டால், இனும் எஸ்டேட் ஆக்டிலே குடிக்காணி ஆட்சி பாத்தியதை ரயத்துக்களுக்கு உண்டு என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி குடிக்காணி ஆட்சி பாத்தியதை உண்டு என்று சொல்லப்பட்டும் (அண்டர் கான்ட்ராக்ட், சேல்ஸ் அல்லது அட்வர்ஸ் பொஸஷனில்) நிலத்தை வைத்துக் கொண்டிருந்தாலும், அவர்களிடம் குடிக்காணி ஆட்சி பாத்தியதைப்படி 60-க்கு 40 என்று வாரம் வாங்கப்படாமல் பாதி வாரம் கொடுக்கப்பட வேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்பட்டு, இல்லாவிட்டால் கோர்ட்டு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதைத் தவிர இனும் அசெஸ்மெண்டு சட்டப்படி பூரு லாண்டு ரிவினியூவும் அவர்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. ஆகவே இதை அவசியம் திருத்தி அமைக்க வேண்டும். அவர்கள் என்னதான் இதிலே உள்ள 4-வது திருத்தத்தைக் காண்பித்தாலும், விமோசனம் ஏற்படுவதில்லை. இதைத் தவிர, நிலத்தை சாகுபடி செய்யக்கூடிய ரயத்துக்களிடம் அசஸ்மெண்ட் கட்டணம் வசூலிக்கும்படியான அளவில் இப்போதுள்ள ரூல்ஸ் இடமளிக்கிறது. அதையும் திருத்தி வருகிற செப்டம்பரிலே இந்தச் சட்டத்தைக் கொண்டு வரும்போது கொண்டுவந்தால், சாகுபடியாளர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள். இதனால் இப்போது பர்மனெண்ட் ஆகுபென்சி ரைட் பாதிக்கப்படுகிறது. சமீபத்தில்கூட திருச்சியிலிருந்து ஒரு கேஸ் இதைப்போல் என்னிடத்தில் வந்தது. கோர்ட்டிலே அப்பீல் செய்வதற்குகூட முடியாத அளவிலே இந்த கேஸ் இருக்கிறது. ஆகவே இந்த இரண்டு பிரிவுகளையும் திருத்தி அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன்.

SRI S. NAGARAJA MONIGAR: சர்க்கார் இன்னும் சில இனும்களை எடுத்துக்கொள்ளாமல் இருக்கிறது. அதன் காரணமாக மற்ற வைகளையும் சேர்த்து நடவடிக்கை எடுப்பதற்காக இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒத்திப்போட வேண்டும் என்று இந்த மசோதா கூறுகிறது. 9-30 a.m. ஏற்கனவே அபாலிஷன் ஆப் ஜமீன்தாரி ஆக்ட் பாஸ் செய்து பல வருஷங்கள் ஆகின்றன. பாக்கி இனும்களை எடுத்துக்கொள்வதற்கு சர்க்காருக்கு எவ்வளவோ கஷ்டம் இருக்கிறது. அதனால்தான் காலதாமதம் ஆகிக் கொண்டு போகிறது. இதற்கிடையிலே எடுத்துக்கொள்ளவேண்டிய இனும்களை தவிர்த்து ஏதேனும் நடவடிக்கை எடுத்துக்கொள்ள சாத்தியப்படாதா? அதற்கு ஏதாவது தகுந்த வழியை சர்க்கார் கண்டுபிடிக்காதா? அவ்வாறு செய்யுமாறு நான் கோருகிறேன்.

* THE HON. SRI M. A. MANICKAVELU: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 'டேகன் ஓவர்' இனும் என்ற ஒரு வகை இனும்கள் இருக்கின்றன. இரண்டாவது, 1936-ம் வருஷத்திய இனும் என்று ஒரு வகை இருக்கிறது. அதாவது எஸ்டேட் என்று முடிவுக்கு வந்து அபாலிஷன் வரவில்லை. 1936-ம் வருஷத்திய இனும், அதோடு மைனர் இனும் இவை இரண்டிற்கும் இப்பொழுது திருத்த மசோதா கொண்டு வருவது பரிசீலனையில் இருக்கிறது. ஏன் இதற்கு முன்னாலேயே கொண்டு வரவில்லை என்று கேட்கப்படுகிறது. அதற்குக் காரணம் அநேக இனும்

களில் மேல்வாரம், குடிவாரம் இரண்டும் இருக்கிறது. காம்பன்ஸேஷன் கோடிக்கணக்கில் போகிறது. அங்கத்தினர் அவர்கள் அதையெல்லாம் "சுட்டு புட்டு" என்று முடித்துவிடவேண்டும் என்று காம்பன்ஸேஷன் சரியாக கொடுக்க வேண்டாம் என்ற அடிப்படையில் சொல்லுகிறார்கள். இதை யெல்லாம் நன்றாக ஆராய்ந்து பார்த்து சரியான வழிவகைகள் வகுத்து சரியான வகையில் ஒரு மசோதா கொண்டுவரப்பட வேண்டும். 'எஸ்டேட் லாண்டு ஆக்ட்' என்பது உலகத்திலேயே ஒரு சிக்கலான சட்டம் என்று ஹைகோர்ட்டு சொல்லியிருக்கிறது. 'அமெண்டுமெண்டு' களெல்லாம் செய்யப்பட்டு 'பிரிவி கவுன்சில்' வரை போயிருக்கிறது. இதில் ரொம்ப 'டெக்னிகாலிடீஸ்' இருக்கின்றன. ஆகையால் இதையெல்லாம் 'லீகலில்' சரியாக ஆராய்ந்துதான் கொண்டு வரவேண்டும். தற்சமயம் பொதுத் தேர்தல் வர இருப்பதால் நெருக்கடி ஜாஸ்தியாக இருக்கிறது. பல்வேறு விதமான அர்ஜெண்டு வேலைகள் இருக்கின்றன. அதற்காக இதை பரிசீலனை செய்யாமல் இல்லை. முறைப் பிரகாரம் அது பரிசீலனை செய்யப்பட்டுதான் வருகிறது. கொஞ்சம் காலதாமதம் ஆகலாம். ஒரு வருஷம் போதும் என்றுகூட கேட்டிருக்கலாம். ஆனால் ஒரு வருஷம் கேட்டால் அடிக்கடி மறுபடியும் அவகாசம் தேவையாக இருந்தால் ஒரு வருஷம் கேட்கவேண்டியிருக்கிறது. அதற்காகத்தான் இரண்டு வருஷங்கள் கேட்கப்பட்டிருக்கிறது. அதனால் இரண்டு வருஷங்கள் ஆகும் என்று அர்த்தம் இல்லை. முன் ஜாக்கிரதையாக இரண்டு வருஷங்கள் இருக்கட்டும் என்ற அளவிற்கு கேட்டிருக்கிறோம்.

சில எஸ்டேட்டுகள் கோர்ட்டில் 'ஸ்டே' யில் இருக்கிறது. சுமார் 20, 28 எஸ்டேட்டுகள் அம்மாதிரி இருக்கும். குடியானவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டியது அவசியம். அதை எல்லோரும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். இந்த மசோதா பொறுத்தமட்டில் இந்தப் பாதுகாப்பு நீடிக்க வேண்டுமென்றுதான் கேட்டிருக்கிறோம். இது சம்பந்தமாக மசோதா கொண்டுவருவதுபற்றியும் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். அது பரிசீலனையில் இருக்கிறது. 'பில்' பாரத்தில் கூட ஆகிக்கொண்டிருக்கிறது. எவ்வளவு சீக்கிரம் கொண்டுவர முடியுமோ அவ்வளவு கூடிய சீக்கிரம் இந்த மசோதா கொண்டுவரப்படும் என்று சொல்லிக்கொண்டு, இந்த மசோதாவை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER: The question is—

"That the Madras Tenants and Ryots Protection (Amendment) Bill, 1961 be taken into consideration".

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 and 1 and the Preamble were put and carried.

THE HON. SRI M. A. MANICKAVELU: Sir, I move—

"That the Madras Tenants and Ryots Protection (Amendment) Bill, 1961 be passed".

DEPUTY SPEAKER: Motion moved—

"That the Madras Tenants and Ryots Protection (Amendment) Bill, 1961, be passed".

SRI M. KALYANASUNDARAM: On a point of personal explanation, Sir. இந்த பார்ட் இனும், மைனர் இனும் இவற்றிலுள்ள ரயத்துக்களுக்கு உரிமை வழங்கக்கூடிய முறையில் மசோதா கொண்டு வருவதற்கு ரொம்ப ஆராய வேண்டியிருக்கிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். 1949-ம் வருஷத்திலிருந்து 1961-ம் வருஷம் வரைக்கும் 12 வருஷங்கள் ஆராய்ந்தாகிவிட்டது. இன்னும்

எத்தனை ஆண்டுகள் ஆராயவேண்டியிருக்கும் என்பது எனக்கு புரியவில்லை. நான் எதோ நஷ்ட ஈடு கொடுப்பதுபற்றி அக்கரை இல்லாமலே ரொம்ப அவசரப்படுவதாக குறிப்பிட்டார்கள். நஷ்ட ஈடு பெறவேண்டியவர்களின் எண்ணிக்கை ரொம்பவும் குறைவு இதிலே. நிலத்திலே இருந்து வெளியேறக்கூடிய ஆபத்துதான் அதிகமாக இருக்கிறது. 'லாண்டு ஸீலிங் பில்' ஒன்று வருகிறது என்று அறிவித்தவுடனேயே கடந்த மூன்று வருஷங்களாக இனாம் பிரதேசங்களில் 145 பிரிவுப்படி போலீஸ் நடவடிக்கை எடுத்து குடியானவர்கள் நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். சற்று முன்பு பஞ்சாயத்து சம்பந்தமாக கேள்வி கேட்டபொழுது சில ஜமீன்தார்கள் குடியானவர்கள் குடியிருக்கக்கூடிய பகுதி, ரோடு எல்லாமே தங்களுடைய நிலத்தில் இருக்கிறது என்று சொல்லி, பஞ்சாயத்து ரோடு போடுவதற்கு இடம் கொடுக்க மாட்டேன் என்று சொல்லுகிறார்கள் என்று கூறப்பட்டது. போலீஸ் யாருக்கு சாதகமாக இருக்கிறார்கள் என்றால், குடியானவர்களுக்கு சாதகமாக இல்லை, இனாம்தார்களுக்குத்தான் சாதகமாக இருக்கிறார்கள். கடந்த மூன்று வருஷ காலத்திற்கு ஒவ்வொரு ஜில்லா கலெக்டரிடமிருந்து ரிபோர்ட்டு கேட்டால், 145 பிரிவுப்படி போடப்பட்ட வழக்குகள் அத்தனையும் அநேகமாக இனாம் நிலங்கள் சம்பந்தப்பட்டவை என்பது தெரியவரும். 100-க்கு 80 கேஸ்களில் இனாம் நிலங்கள் சம்பந்தமாகத்தான் தகராறு இருக்கும். இதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நில வெளியேற்றமெல்லாம் முடிந்த பிற்பாடு, பார்ட் இனாம், மைனர் இனாம் சம்பந்தமாக சட்டம் கொண்டு வந்தால், அதனால் குடியானவர்களுக்கு லாபம் இராது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கனம் அங்கத்தினர் சீனுவாசய்யர் அவர்கள் குடியானவர்களிடமிருந்து அசெஸ்மெண்டுகூட வசூல் செய்கிறார்கள் என்று சொன்னார்கள். வாரமும் செலுத்தி, அசெஸ்மெண்டும் கொடுத்து, இந்த இரண்டுமே செலுத்தினால் கூட, நிலத்தை விட்டு வெளியேற்றாமல் இருந்தாலே அது பெரிய நன்மையாக இருக்கும் குடியானவர்களுக்கு என்பது என்னுடைய அபிப்பிராயம். இந்த இரண்டையும் வசூல் செய்துகொண்டு குடியானவர்களை நிலத்தை விட்டும் வெளியேற்றக்கூடிய ஜமீன்தார்கள் இருக்கிறார்கள். பாதுகாப்பு சட்டம் கொண்டு வருவதற்கு காலதாமதம் ஆனாலும், நிலத்தை விட்டு வெளியேற்றக் கூடாது என்ற அளவுக்காவது முதலில் சட்டம் கொண்டுவரவேண்டும். நிர்வாக அதிகாரத்தை உபயோகப்படுத்த கலக்டர்கள், ஆர்.டி.ஓக்கள் இது சம்பந்தமாக சமரஸமாக பேச்சு வார்த்தை நடத்தியாவது குடியானவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும். அவர்கள் குடியானவர்களின் எவிக்ஷனுக்கு உதவி செய்யக்கூடாது. எவிக்ஷன் செய்வதற்கு உத்தரவு போடக்கூடாது. கலெக்டர்கள் மகாநாட்டில் இம்மாதிரி உபயோககரமான விஷயங்களைப்பற்றி பேச வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

Sri R. SRINIVASA IYER : நிலத்தைவிட்டு அப்புறப்படுத்தப்படுகிற விஷயமாக கொஞ்சம் 'குழப்பம்' இருக்கிறது. 1936-வது வருஷத்திய இனாம் எஸ்டேட்டிலிருந்து அப்புறப்படுத்தவே முடியாது. என் என்று கேட்டால், 1934-ம் வருஷம் ஜூன் மாதம் 30-ம் தேதியில் ஒரு நிலத்தை ஒரு மனிதன் ஆக்ட் 18 ஆப் 1936-படி அனுபவத்திருந்தால், எஸ்டேட் லாண்டு ஆக்ட் 6 (1) பிரிவின்படி அவனுக்கு குடிக்காணி ஆட்சி பாத்யதை வந்துவிட்டது. இதற்கு எல்லாம் ரெண்டு ரிடக்ஷன் ஆக்ட். ஆக்ட் 30 ஆப் 1947 அப்ளை ஆகிறது. செக்ஷன் 3 (2) ஆப் ஆக்ட் 3 ஆப் 1947-படி சர்க்கார் நோடிபிகேஷன் போட்டுவிட்டார்கள். அந்த எஸ்டேட்டிற்கு குடிக்காணி ஆட்சி பாத்யதை வந்துவிட்டதால், அந்த இடங்களிலே நிலத்தைவிட்டு அப்புறப்படுத்தவே முடியாது. கிரிமினல் புரொசிஜர் கோடு 145-வது செக்ஷனாக இருந்தாலும் சரி, வேறு செக்ஷனாக இருந்தாலும்கூட அப்புறப்படுத்த முடியவே முடியாது. இதைத் தவிர்த்து அதில் என்ன சிக்கல் இருக்கிறது என்றால், எது பிரவேட் லாண்டு, எது ரையடி லாண்டு என்று தீர்மானம் செய்வதற்கு ஏற்கனவே ரெண்டு ரிடக்ஷன் ஆக்டில் கலெக்டருக்கு பவர் இல்லாமல் இருந்தது.

24th August 1961] [Sri R. Srinivasa Iyer]

அந்த பவர் பிந்தி திருத்தப்பட்ட ஆக்ட்படி கொடுத்தாய் விட்டது. ஒரு குறிப்பிட்ட தேதிக்குள்ளே அந்த லாண்டுலார்டு 'இது என்னுடைய பிரைவேட் லாண்டு' என்று டெக்லார் செய்து மனுப் போடவேண்டும். அப்படி குறிப்பிட்ட தேதிக்குள் மனு போடவில்லை என்றால், அது ஆட்டமாடிக்காக ரையடி லாண்டாக கருதப்படும் என்று சட்டம் போட்டாய் விட்டது. ரையடி லாண்டு என்றால் எஸ்டேட் லாண்டு ஆக்ட்படி குடியானவன் பட்டா கேட்கலாம். பட்டா கொடுக்க வேண்டுமென்று லாண்டு ஹோல்டருக்கு பெடிஷன் செய்து பட்டா வாங்கிக்கொள்ளலாம். அதற்கு ஸ்டாம்பு கூட கிடையாது. எவிக்ஷன் பண்ணுவது எங்கு என்றால், பார்ட் இனும், ரயட்வாரி வில்லேஜில் இருக்கும் மைனர் இனும் இதில்தான். இது ஸ்டேட் பூராவிலும் எடுத்துக் கொண்டால், சுமார் 4,000 ஏக்கராக்கள் தான் இருக்கும். அது ஒரு ஏக்கர், 50 செண்ட் என்று கொஞ்சம் கொஞ்சமாக இருக்கிறது. டெனண்டுக்கு குடிக்காணி ஆட்சி பாத்தியம் காண்ட்ராக்டிலோ, கோர்ட் மூலமோ அல்லது அட்வர்ஸ் பொஸஷென் மேலே வந்த தீர்ப்பு மூலமோ வரும். **Seturatnam Iyer vs. Venkatachala Gounder** என்று நடந்த வழக்கில் ப்ரிவி கவுன்சில் தீர்மானப்படி வரும். திறப்பு நிலத்தில் அட்வர்ஸ் பொஸஷென் மூலமாக அந்த பாத்தியதை உண்டு. ஆகவே, அப்புறப் படுத்துவது என்று சொல்லும்போது, ரயட்டுவாரி லாண்டுக்கு ப்ரொடெக்ஷன் இருக்கிறது.

" minor inam in a ryotwari village, minor inam in an estate taken over and minor inam in an estate not yet taken over "

இதற்கெல்லாம் 18-வது ஆக்டுபடி ரொம்ப சுலபம். இதிலே கிரி.ப.கோடு 145-வது பிரிவு வர எதுவும் கிடையாது. உண்மையிலேயே சாகுபடிக்காரர்கள் பலாத்காரமாக 50, 100 பேர்கள் சேர்ந்து கொண்டு, ஆக்ரமித்துக்கொண்டு, சாகுபடி செய்கிறோம் என்று கலகம் ஏற்படும் கேசுகளில் தான் போலீஸ் உதவி வருகிறது. அதிலேகூட ஒரு விஷயம். கிரி.பு.கோடு செக்ஷன்கள் 145, 146 திருத்தப்பட்டிருக்கிறது. டெபுடி கலெக்டர், சப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட், 145-வது பிரிவுப்படி பொஸஷென் பற்றி தீர்மானம் செய்ய, ரிஸீவரை நியமித்து ரெவின்யூ இன்ஸ்பெக்டரிடம் பொஸஷென் கொடுத்து, சிவில் கோர்ட்டுக்கு ரெபர் பண்ணுகிறார்கள். ஆகவே இதிலே போலீஸ் பந்தோபஸ்து வைத்துக் கொண்டு ஒன்றும் செய்ய முடியாது. இதற்கு மேலும் இரண்டு அப்பீல்கள் இருக்கின்றன. பலாத்காரமாக சாகுபடி செய்கிறதாகச் சொல்லிக்கொண்டு பொய் சொல்லும்போது, அப்புறப்படுத்துவதை ஆட்சேபிக்க முடியாது.

காம்பென்சேஷன் விஷயத்தில் கனம் அமைச்சர் சொன்னதுபோல, எஸ்டேட் அபாலிஷன் விஷயத்தில், ஜமீன்தார்கள் ரெவினியூ வசூல் செய்கிறவர்கள்தான், சர்க்கார் சிப்பந்திதான், கலெக்டர் ஆப் ரெவின்யூ தான் என்று சொல்லி ரெண்ட் ரெடக்ஷன் ஆக்டும் செய்து, ஜமீன்களுக்கு காம்பன்சேஷனைக் குறைத்து, மேல்வாரத்தின் அளவையும் தீர்வை அளவையும் குறைத்து அதையும் மல்டிப்ளை பண்ணி, எஸ்டேட் அபாலிஷன் ஆக்டில் நடக்கிறது. காம்பன்சேஷன் டெபாஸிட் பண்ணின தொகை கூட கைக்கு வரவில்லை. இனாம்தார் பொஸிஷன் அப்படி இல்லை. காலம் சென்ற காலா வெங்கட்டராவ் சொன்னது போல, பசுமாடு போகும்போது, கன்றும் போகும் என்றது போல, இனாம்தார்களும் ஜமீன்தார்களுடன் ஒழிக்கப்பட்டார்கள். இனாம்தார்களின் உரிமைகள் வேறு. ஜமீன்தார்களை போல் அல்ல. இனாம்தார்கள் சம்பந்தப்பட்ட வரையில் 1859 வாக்கில் பல சட்டங்கள் இயற்றப்பட்டு அதன் மூலம் இனாம்தார்களுக்கு பல உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. 1936-ம் வருஷ இனாமுக்கோ, மைனர் இனாமுக்கோ, இருவாரமாக உள்ள நிலங்களுக்கோ புதிதாக அவைகளை ஒழிக்க சட்டம் கொண்டுவந்தால் அந்த இனாம்தார்களுக்கு பட்டா கொடுக்கவோ, காம்பன்சேஷன் கொடுக்கவோ தீர ஆலோசனை செய்து பண்ணவேண்டிய விஷயம். எஸ்டேட் அபாலிஷன் ஆக்ட் 26/48-படி கொண்டு வரலாம் என்பது சரியான அபிப்பிராயம் அல்ல.

தீர்வை சம்மந்தப்பட்டவரை, மேல்வாரமும், சர்க்கார் தீர்வையும் இரண்டும் குடியானவர்களே கொடுப்பார்கள் என்று கனம் அங்கத்தினர் கல்யாண சுந்தரம் சொல்வதுபோல் அவரே சம்மதித்தால் எனக்கு ஒன்றும் ஆட்சேபனே இல்லை. அவர்கள் அப்படி இஷ்டப்படவில்லை என்று எனக்கு தகவல்கள் வந்ததால் நான் அதை எடுத்துச் சொன்னேன். கனம் கல்யாணசுந்தரம் சொல்வதுபோல் செய்வதானால் எனக்கு ரொம்ப சந்தோஷம்.

Sri M. KALYANASUNDARAM : Sir, on a point of personal explanation, நண்பர் ஸ்ரீனிவாச அய்யர் அவர்கள், நிஇத சட்டத்தையே தொழிலாக உள்ளவர்கள், ஆதலால் அவர்கள் அதை மிக விளக்கமாகச்சொன்னார்கள். அந்த அளவுக்கு அறிய எனக்குச் சந்தர்ப்பம் இல்லை என்றாலும், ராஜ்யம் பூராவிலும் நடப்பதுபற்றி வேறு துறைகளில் அறிந்துகொள்ள வாய்ப்பு உண்டு. இந்த இராச்சியத்திலே இரண்டு மூன்று பெரிய வக்கீல்களுடனும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. என் அனுபவத்தையும் வைத்துச் சொல்கிறேன். 36-வது சட்டப்படி வரக்கூடிய எஸ்டேட்டுகளில் கூட இனாம்தார் சொந்த நிலம் என்று சொல்லி வசப் படுத்திக் கொள்கிறார்கள். ரயட்டுகளுக்கு விஷயம் தெரியாததால், அவர்கள் ஆட்சேபிக்க சந்தர்ப்பம் இல்லை. அதைப் பயன்படுத்திக்கொண்டு செய்வதைத்தான் நான் சொன்னேன். இரண்டையுமே வசூலிக்கலரம் என்று நான் சொல்லவில்லை. அதைவிட மோசமானது நிலத்தை விட்டு அப்புறப்படுத்தப்படுவது. 36-வது சட்டப்படி இருவார பாத்தியதை தெளிவாக இல்லாத விஷயத்திலே கூட குடிவாரத்தை விலைக்கு வாங்கிக் கொண்டு விடுகிறார்கள். அதைத்தான் நான் சொல்ல வந்தேன்.

Sri R. SRINIVASA IYER : On a point of personal explanation. . .

DEPUTY SPEAKER : There is no personal explanation. The Hon. Minister can speak now.

*The Hon. Sri M. A. MANICKAVELU : எதிர்க்கட்சி அங்கத்தினருக்கு கனம் அங்கத்தினர் ஸ்ரீ ஸ்ரீனிவாச அய்யரே பதில் சொல்லிவிட்டார்கள். என்ன காரணம் என்றால், அவர்களுக்கு இந்த மாதிரி விஷயத்திலே நிறைய அனுபவம் உண்டு. இதிலேயே வக்கீலாகத் தொழில் செய்பவர்கள். அனுபவத்தை அவர்களால் அடக்க முடியவில்லை. ஆகவே இந்த விஷயத்தைத் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். இப்பொழுது விவசாயிக்கு பாதுகாப்புக் கொடுக்கவில்லை. பிற்பாடு கொண்டுவரும் மசோதாவில் பாதுகாப்புக் கொடுக்கப்படுகிறது. இப்பொழுது கொண்டு வந்திருக்கும் மசோதாவில் அது இல்லை.

போலீஸ் பற்றி புகார் சொன்னார்கள் கனம் அங்கத்தினர் கல்யாண சுந்தரம். உண்மையாக இந்த ஜனநாயக ராச்சியத்திலே, அவர்கள் மட்டும் மனுஷர்கள் இல்லையா, அவர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்க வேண்டாமா ? அப்படி எனக்கு வரும் தகவல்கள் வேறுவிதமாக இருக்கின்றன. எங்கோ ஓரிடத்தில் தவறாக நடக்கலாம். அதைப் பிரமாதமாக ஜெனரல் ரூலாகச் சொல்வது சரியில்லை.

காம்பன்சேஷன் கொடுக்கும் விஷயத்திலே நாங்கள் தோராயமாக ஒரு கணக்குப் போட்டோம். அதில் 15 கோடி அல்லது 16 கோடி வேண்டியிருக்கும் என்று தெரிந்தது. மேல்வாரம், குடிவாரம் இரண்டும் சேர்ந்து இருப்பதால் அப்படி வருகிறது. ஜமீன் ஒழிப்பிலே, ஆந்திராவும் சேர்ந்திருந்தபோது 12 கோடிதான். இப்பொழுது அதற்கு மேலும் அதிகமாகிறது. பணத்தை தேடியாக வேண்டும். சட்டம் பண்ணி விட்டால் போதுமா ? பணத்தை வைத்துக்கொண்டுதானே சட்டம் செய்ய வேண்டும். பணம் கிடைக்கவில்லை. சட்டத்தைச் செய்துவிட்டால், ஏன் பணம் கொடுத்து அமல் நடத்த வில்லை என்று இவர்களே கேட்பார்களே ? அதனால்தான் காலதாமதம். விவசாயியை அப்புறப்படுத்தாமல் அரசாங்கம் கவனம் செலுத்தி மசோதா கொண்டுவருகிறது. இதிலே வீணாக ஏதோ விவசாயிகளுக்கு அரசாங்கத்தார் நன்மை செய்யவில்லை என்று சொல்லவேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

24th August 1961]

DEPUTY SPEAKER: The question is—

"That the Madras Tenants and Ryots Protection (Amendment) Bill, 1961 be passed".

The motion was put and carried and the Bill was passed.

(5) THE MADRAS CULTIVATING TENANTS PROTECTION (AMENDMENT) BILL, 1961.

* THE HON. SRI M. A. MANICKAVELU: Sir, I beg to introduce the Madras Cultivating Tenants Protection (Amendment) Bill[a] 1961, and move—

"That the Bill be taken into consideration".

The Madras Cultivating Tenants Protection Act, 1955 (Madras Act XXV of 1955) was last extended to be in force up to and inclusive of 26th September 1961. The object of the Act is to protect the interests of the cultivating tenants in this State pending comprehensive land reforms. As it will take some time more for ceiling to be imposed on land holdings and for revision of the tenancy laws suitably, the Government consider that the life of the Act should be extended for a further period of two years from 27th September 1961. The Bill accordingly provides for the extension of the life of the Act up to 26th September 1963.

The hon. Members are aware that the Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Bill, 1960, on the anvil and the House is going to take up in a couple of days.

DEPUTY SPEAKER: Motion moved—

'That the Madras Cultivating Tenants Protection (Amendment) Bill, 1961, be taken into consideration'.

SRI M. KALYANASUNDARAM: Sir, I move—

'That the Bill be referred to a Select Committee consisting of certain Members of the Assembly with instruction that the report be presented before 31st August 1961, with a view to examining what provisions of the main Act require amendments.'

The amendment was duly seconded.

DEPUTY SPEAKER: The motion and the amendment are before the House for discussion.

SRI M. KALYANASUNDARAM: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தச் சட்டம் 1955-வது வருஷத்திலிருந்து அமுலில் இருந்து வருகிறது. இப்பொழுது கிட்டத்தட்ட ஆறு வருஷம் பூர்த்தியாகிவிடுகிறது. இன்னும் இரண்டு வருஷத்திற்கு நீடிக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் கோருகிறார்கள். அவ்வாறு நீடிப்பதைப்பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை. நில உச்சவரம்பு நிர்ணயிக்கும் சட்டம் அமுலுக்கு வந்தாலும் கூட இந்தப் பாதுகாப்பு இருக்கவேண்டியது அவசியம். உச்சவரம்புச் சட்டத்தைப் பற்றி நாம் இங்கே விவாதிக்கிற பொழுது அதிலே இருக்கக் கூடிய குறைபாடுகளைப்பற்றி அப்பொழுது பேச விரும்புகிறேன்.

[a] Published in the *Fort St. George Gazette*, dated 2nd August 1961.